# அல் யவ்முல் ஆகிர்

உயிரினங்கள் அனைத்துக்கும் பிறப்பு இருப்பதைப் போலவே இறப்பும் இருக்கின்றது. இன்று உயிருடன் இருப்பவர் நாளை மரணிக்கின்றார். இப்போது உறுதியாக இருக்கக்கூடிய பொருட்கள் பின்னர் அழிந்து போகின்றன. உயிருள்ளவையாக இருந்தாலும் உயிரற்றவையாக இருந்தாலும் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே இவ்வுலகில் இருக்க முடியும் என்பதை இதிலிருந்து விளங்க முடிகின்றது. இறுதியில் அனைத்தும் முற்றாக அழிந்து போகக்கூடிய ஒரு நாள் வரும்.

உலகம் முடிவதற்கான இறுதிநாள் நெருங்கும்போது உலகில் சில மாற்றங்கள் நடக்கும். சூரியனின் ஒளி மங்கிப் போகும். வானம் வெடிக்கும். நட்சத்திரங்கள் உதிர்ந்து விழும். கடல் கொதித்துக் கொந்தளிக்கும். மலைகள் உடைந்து தூளாகும். பூமி தன்னில் அடங்கியுள்ளவைகளை வெளியே தள்ளிவிடும். அப்போது உலகம் முடியப் போகின்றது என்பதை மனிதர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

அவ்வேளை இஸ்ராபீல்(அலை) அவர்கள் ஸூர் எனும் குழலை ஊதுவார்கள். அப்பொழுது அல்லாஹ்வின் கட்டளைப்படி உலகமும் உலகிலுள்ள அனைத்தும் அழிந்து விடும். இதனை உலக முடிவு நாள் "அல்யவ்முல் ஆகிர்" என்கிறோம்.

இதனை அடுத்து சில காலங்களுக்குப் பின்னர், இஸ்ராபீல் (அலை) அவர்கள் இரண்டாம் முறையும் ஸூர் எனும் குழலை ஊதுவார்கள். அல்லாஹ், தன் நாட்டப்படி எல்லோரையும் உயிர் கொடுத்து எழுப்புவான். மனிதர்கள் யாவரையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டுவான். ஒவ்வொருவரும் இவ்வுலகில் எப்படி வாழ்ந்தார்கள்

என்பதைப் பற்றி அங்கு விசாரணை செய்வான். அவ்வேளை மக்கள் எல்லோரும் பயந்து நடுங்கிக் கொண்டிருப்பார்கள். இவ்வுலகில் நன்மை செய்தோர் சுவர்க்கத்துக்கு அனுப்பப்படுவார்கள்; அங்கு அவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள். தீமை செய்தவர்கள் நரகத்துக்கு அனுப்பப்படுவார்கள். அதில் அவர்கள் கடுமையாக வேதனை செய்யப்படுவார்கள்.

இவற்றைப் பற்றி நாங்கள் நம்பிக்கை கொள்வதுடன் நன்மையான காரியங்களை எப்போதும் செய்து வர வேண்டும்.

**படைப்பினங்கள் அனைத்தும் அழியக் கூடியன**

## பயிற்சி

### பொருத்தமான சொற்களைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புங்கள்.

1. உலக முடிவு நாளை .................... என அழைப்பர். (அல்யவ்முல் ஆகிர், யவ்முல் ஜும்ஆ)
2. உலக முடிவு ......................... ஸூர் ஊதுவதன் மூலம் ஏற்படும். (இஸ்ராபீல்(அலை), இஸ்ராயீல்(அலை)
3. ....................... ஊதப்பட்டால் மறுமைநாள் ஏற்படும். (முதலாவது ஸூர், இரண்டாவது ஸூர்)
4. உலகில் நன்மை செய்வோருக்கு ............. கிடைக்கும். (சுவர்க்கம், நரகம்)
5. உலக முடிவின்போது மாற்றங்கள் ................................ (ஏற்படாது, ஏற்படும்)